[2015 பிப்ரவரி 18

'கலைமகளைத் தமிழகத்திற்கு அனுப்பி வை' என கைகூப்பி வேண்டிய கல்விக் கூடங்கள்; அத்தனையும் பலித்தன. அம்மா அவர்களின் வருகையின்போது, ஆகாயம் ஆனந்தக் கண்ணீர் வடித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) மேகம் மழை தூவ, தாய் முகம் தரிசித்த பின்னரே இந்தத் தாய் மண்ணும் சிரித்தது. அம்மா, சிறு பிள்ளை தொடங்கி அத்தனை பேருக்குள்ளும் நிரம்பி இருக்கும் அதிசயம் நீங்கள் என்பது இன்னொரு முறை இந்த மண்ணிலே வெளிப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, அந்த நாட்களில் நீங்கள் தமிழகத்தில் இல்லாமையால் வாழ்க்கைச் சக்கரம் ஓடவில்லை. அம்மா, தொடர் வெற்றி என்பது வெற்றியல்ல, சோதனைக்குப் பின் மீண்டும் எழுவதே வெற்றி, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

புரட்சித் தலைவி, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் சோதனையான அந்த நாட்களில் தமிழகத்தின், உலகத் தமிழர்களின் ஒட்டுமொத்தமான இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்துப் போய்விட்டதற்கு என்ன காரணம் என்று என் சகோதரர் கேட்கிறார்.

அம்மா, ஏழைகளின் வறுமை வலி தீர்க்க என்னாளும் உழைத்தீர்கள், அம்மா! அம்மா, நீங்கள் காவேரியை மீட்டு கல்லணையில் சேர்த்தீர்கள், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் முல்லை ஆற்றின் உரிமையைக் காத்து 5 மாவட்ட உழவர்களின் கவலையைத் துடைத்தீர்கள், அம்மா! (குறுக்கீடுகள்) அம்மா, நீங்கள் இன அழிப்பு இலங்கைக்கு கொலை நடுக்கம் தந்தீர்கள், அம்மா! அம்மா, நீங்கள் விழி துஞ்சா உழைப்பால் காவேரியை மீட்டு வந்தீர்கள், அம்மா! (குறுக்கீடுகள்) அம்மா, நீங்கள் என்.எல்.சி. பங்குகளை ஏழைக்கே சொந்தம் செய்தீர்கள், அம்மா! (குறுக்கீடுகள்) அம்மா, நீங்கள் வறுமையைப் போக்க வீடுதோறும் விலையில்லா அரிசி தந்தீர்கள். அம்மா, நீங்கள் வெண்மைப் புரட்சிக்கென கிராமந்தோறும் கறவை மாடுகள், ஆடுகள் தந்தீர்கள், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் கல்வி கற்க கலங்கி நிற்கும் பெண்ணினத்தைக் கரை சேர்த்துக் காப்பதற்கு தாலிக்குத் தங்கம் தந்தீர்கள், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் கிராமப்புறப்

2015 பிப்ரவரி 18]

பெண்களின் வேலைச் சுமையைக் குறைக்க மிக்சி, கிரைண்டர்கள் கொடுத்தீர்கள், அம்மா! அம்மா, நீங்கள் பள்ளிப் பிள்ளைகளுக்குச் சீருடைகள் தந்தீர்கள், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் அனைத்து ஏழை வீட்டுப் பிள்ளைகளுக்கும் உலகத் தரம் வாய்ந்த இலவசக் கல்வி தந்தீர்கள், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் உலகத்தை உள்ளங்கையில் அடக்கிட இலவச மடிக்கணினி தந்தீர்கள், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் கடவுள் அனுப்பிய தூதர், அம்மா! நீங்கள் உலகத் தமிழினமே கைகூப்பி வணங்கும் தூதர், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, கள்ளிப் பாலூட்டி சிசுக் கொலையைத் தடுக்க அரசுத் தொட்டில் கட்டி தாய்க்குலத்தைக் காத்தவர் நீங்கள், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் பாரதத்தின் மூன்றாம் பெருங்கட்சியின் நிரந்தரப் பொதுச் செயலாளர், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, நீங்கள் வருங்கால பாரதத்தை வல்லரசாய் வடிக்கும் செயலாற்றல் மிக்கவர், அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் எத்தனை, எத்தனையோ இருக்கின்றன. சொல்வதற்கு நேரம் இல்லை.

அம்மா, நீங்கள் இல்லாத சட்டமன்றம், பிறை இல்லா வானமாக, இசையில்லாப் பாடலாக, இமையில்லாக் கண்ணாக, (மேசையைத் தட்டும் ஒலி) இலையில்லா மரமாக, உயிரில்லா உடலாக, விழியில்லா முகமாக, வழியில்லா காடாக, களையில்லா முகமாக, மலர் இல்லா மாலையாக, குயில் இல்லா சோலையாக, திரி இல்லா விளக்காக, கடவுள் இல்லாத தேராக, கதவு இல்லாத வீடாக, திலகம் இல்லாத நெற்றியாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றம் பொலிவிழந்து காணப்படுகின்றது. அதனால் 3 வார வேள்வி முடித்து வேங்கையாக வெளிவந்த முத்தமிழரசி, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் தமிழக முதலமைச்சராகப் பட்டாபிஷேகம் செய்துகொள்ள (மேசையைத் தட்டும் ஒலி) பார்போற்றும் இயக்கம் நடத்திட, 10 கோடி தமிழர்கள் சத்தியப்பிரமாணம் எடுக்கின்ற சரித்திர நிகழ்வென வருங்காலம் சொல்லிட, மாண்புமிகு அம்மா அவர்கள் விரைவில் மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சர் ஆவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் ஆவார், ஆவார் அது நடக்கும், நடக்கும், நடக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

ஒரு சம்பவம் என்பது நேற்று; அது சரித்திரம் என்பது இன்று, அது சாதனையாவது நாளை. (மேசையைத் தட்டும் ஒலி) வந்த சோதனைகள் இடைவேளை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில், அம்மையார்குப்பம், ஆர்.கே. பேட்டை, வங்கனூர் பகுதிகளில் இருக்கின்ற மக்கள் 90 சதவீதத்திற்குமேல் கைத்தறியை நம்பியே வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளிலே . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கின்றார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி கேட்கிறார், உட்காருங்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: அந்தப் பகுதிகளில் விசைத்தறிப் பூங்கா அமைக்க அரசு மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் மூலக் கேள்வி கேட்டிருக்கின்றார். (குறுக்கீடு) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவர் குற்றச்சாட்டு ஒன்றும் சொல்லவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண் சுப்பிரமணியன் அவர்கள் நல்ல இடத்தில் வந்து சேர்ந்து விட்டோம் என்ற பூரிப்பில் உரையாற்றிக்கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர், சகோதரர் திரு. பெரியகருப்பன் அவர்கள் படுதோல்வி அடைந்து விட்டோம் என்ற விரக்தியில் உரையாற்றிக்கொண்டிருக்கின்றார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர்கள் பாரதிய ஜனதாவோடு கூட்டணி, கூட்டணி என்று